1987 நவம்பர் 17]

வைகை பெரியார் மேம்பாட்டுத் திட்டம்.

172—(*வினா எண் 13979) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு, நிலக்கோட்டை போன்ற வறண்ட பகுதிகளுக்கு 3 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கவும் அதற்காகும் செலவுத் தொகை ரூபாய் 4 கோடி ஒதுக்கியதும் உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

விருத்தாசலம் தாலுகாவில் ஏரி, குளம், ஆறு, வாய்க்கால் இவைகளை ஆழப்படுத்துதல்.

173—(*வினா எண் 14396) திரு. ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலுக்காவில் ஏரி, குளம், ஆறு, வாய்க்கால் இவைகளை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, விருத்தாசலம் வட்டத்திலுள்ள ஏரி, குளம், ஆறு மற்றும் வாய்க்கால் இவைகளின் தேவைக்கும் நிலைமைக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கும் ஏற்ப பராமரிப்பு நிதியிலிருந்து ஆழப்படுத்தி பராமரிக்க நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகிறது.